சேராதீர்கள்! சேராதீர்கள்! அக் குழுவிடம்!

Phone No. 4502 Regd. No. M. 5458

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (20—9—49) ✠ வெளியீடு (21—9—49) | இதழ் 42

உரிமைப் பணியில் ஒன்றுபடுவது அறமல்ல!

நாடு நமது - ஆட்சி நமது - உரிமைபேசுவது அடுக்குமா?

பெர்மிட்டுக்குப் பல்லிளிக்கும் படையில் பங்குகொள்க!

பட்டாபியின் பிரபந்த பாசுரம்!

அரசியல் சுதந்திரம் என்பது, நடைமுறையில் — மக்களின் வாழ்க்கைத் துறைகளில—நாள் தோறும் நிகழும்சிலட்ல நிகழ்ச்சிகளில்-கண்களுக்கும் கருத்துக்கும் வெளிப்படையாக—விளக்கமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய உருவில் அமைந்திருக்க வேண்டும். சுதந்திரம் பிறரால் பறிக்கப் பட்டிருந்த அடிமை நிலையில், அந்த அடிமைப் பட்டமக்கள் பெற்றிருக்கும் வாழ்க்கை நிலைக்கும், சுதந்திரம் பெற்ற பின்னர் அடைந்துள்ள புதிய வாழ்க்கை நிலைக்கும், பெரியதோர் மாறுதல் - முன்னேற்ற மானப்போக்கில்-இருந்தாக வேண்டும். உடனடியாக, இந்த மாறுதல் உருவெடுக்க வில்லையானலும், முன்னேறறப் பாதையில் தான் மாறுதல் சென்று கொண்டு இருக்கின்றது என்பதற்கான அறிகுறியாவது, விவாதத்திற்கு இடமில்லாமல் இருந்தாக வேண்டும். நாட்டு மக்கள் அரசியல் அடிமை நீங்கப் பெற்று-சுதந்திரம்—புதிய நிலை-பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு, மக்கள் வாழ்வில் காணப்படும் இந்த முற்போக்கான மாற்றத்தைத்தான் அடையாளமாகக் கொள்ள முடியும்.

சுதந்திரம் நீங்கிய நிலையில் மக்கள் முகத்தில் காணப்பட்ட சஞ்சலக் குறி மறைந்து, சுதந்திர வாழ்வில் முக மலர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; புதிய நிலையினால மக்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சி பூத்தாக வேண்டும்; அக நிகழ்ச்சிகளிலும் புற நிகழ்ச்சிகளிலும் புது மணம் கம கம வென்று கமழ்ந்தாக வேண்டும்; நாட்டு மக்களிடம் இவை கண்டிப்பாக இருந்தாகவேண்டும், என்று அரசியல்கலை பயின்றோர், ஆட்சி நுணுக்கம் தெரிந்தோர், மக்கள் உளநூல் கற்றோர் தீட்டியுள்ள தீட்டிவரும் சிறப்பியல்புகளாகும்.

இருக்கிறதா-காணமுடிகிறதா-கடுகளவாவது, காங்கிரசார் பதவி பெற்றபின்னர், மக்கள் முகத்தில், இச்சிறப்பியல்புகள்? எவருக்காவது, 'ஆம்!' என்று கூற துணிவுஉண்டா இதுவிஷயத்தில்? 'ஆம்' என்று கூறுவரோ ஆளவந்தார்களே கூட முடியாது! முடியாது! எவராலும் 'ஆம்!' என்று கூற முக்காலும் முடியாது!

அன்னியர்-ஆங்கிலேயர் ஏகாதிபத்திய ஆட்சியில், இத் துணைக் கண்டத்து மக்கள முகத்தில் துன்பம் மட்டும் தோய்ந்து கிடந்ததென்றால், இன்று 'சுதந்திர' ஆட்சியில, காங்கிரசாரின் அகிம்சா தர்ம ஆட்சியில, ஆளவந்தாகளின் இராமராஜபத்தில், விழிநீரால் கறை படிந்து காய்ந்துபோன கண்ணுவிக்காட்சியைக் காட்டிநிற்கும் திரையாக மாறிப்போயிருக்கிறது, மக்கள் முகம்! மக்கள விழிகள், நீர்ப் பெருக்கும் ஆற்றலை இழந்து நெடு நாட்கள் ஆகிவிட்டன, அகிம்சா மூர்த்திகளின் அரும் பெரும் சாதனைகளால்!

முன்னாள் ஆட்சியில்-ஏகாதிபத்தியக் 'கொடுங்கோல் முறையில்' கொல்வறுமை-பஞ்சம்-பட்டினி - வேலையின்மை—கடல் கடத்தல் — கண்ணீர்ச்சிந்தல்' போன்ற இன்னல் பல இருந்திட்ட போதிலும், அதனை நாவன்மை மிக்க ஆதிக்க வெறியர்கள அதிகமாகக்கூட்டிக் காட்டி வந்த போதிலும், எடுத்துக்கூறவும், பரிகாரம் தேட அமைதியாக முயற்சிக்கவும், ஸ்தாபன ரீதியில் ஒன்று பட்டு நிற்கவும், சட்டத்திற்குட்பட்டு அமைபாதிகக் கிளர்ச்சி செய்யவும், கோணல்ஆட்சியைக் குறை கூறவும் கண்டிக்கவும், அடுத்தடுத்து ஊராளும் வெள்ளை ஊதாரிகளின் உளுத்துப் போன ஆட்சிக்கு எதிராக மக்கள்படை திரட்டவும், அந்த ஆங்கிலேய மமதையாளர்கள் ஆட்சியிலே, அதற்கான அடிப்படை உரிமைகளை-அளவு மீறினால் அன்றி—இன்றுள்ளது போல் முழுதும் பறி கொடுத்து விட்டுப் பரிதவித்ததில்லை, இந்நாட்டு மக்கள். பேச்சுரிமையை - எழுத்துரிமையை-கூட்டம்கூட்டும் உரிமையை. இழந்துஆளவந்தார்களின் இன்றைய கோணல் ஆட்சியில் மக்கள் நிமிஷம் தவறாமல் கண்ணீர் சிந்துவதுபோல், அந்த அதர்ம ஆங்கிலேயர் ஆட்சியில், நிரந்தரமாகக் கண்ணீர் சிந்தும் பெரும் பணி புரிந்ததில்லை மக்கள்!

'இழைக்கலாமா இத்தகு தீங்கினைத் தனிகபர்களுக்கு' என்று அடக்க ஒடுக்கத்தோடு கேட்டாலும், 'அவிழ்த்து ஏவப்படுகிறது ஆளவந்தார்களால் அடக்குமுறை ஓநாயை,' மக்களை ஆட்டுமந்தைக் கூட்டம் என்ற நினைப்பில்! 'நம்மவர் ஆட்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

வகையாக ஆட்சி நடத்த அறியீரா வாய்ப்பேச்சு வீரரே!

வேண்டுவது இயந்திரமா? கைராட்டையா?

"இன்று இந்தியாவிலே, வக்கீல்கள, பத்திரிகைக்காரர்கள், டாக்டர்கள், முதலியவர்களைவிட இஞ்சினியர்களே மிக மிக இன்றியமையாது தேவைப்படுகின்றனர்"

என்று வங்காளப் பத்திரிகைக்கார கைலாஷ் என்பவரும், கல்கத்தா நகரசபை முன்னாள் இஞ்சினியர் டே என்பவரும் கோவையில் நடத்திய இஞ்சினியர் சங்கக் கூட்டத்தில் பேசினர்.

"தாராளமாகத் தொழில் கல்வி நிலையங்கள ஏற்படுத்தியதால் அமெரிக்கா இன்று எல்லாத் துறைகளிலும் முன்னணியில இருக்கிறது. சமாதும தொழிற கல்வி நிலையங்களை நிறுவமுனைதல் வேண்டும்"

இந்திய விஞ்ஞானி சர் சி. வி. இராமன் அதேஇடத்தில் பேசினார்.

இஞ்சினியர்கள் தேவை, தொழிற் கல்வி நிலையங்கள்தேவை-இவைகளால் நம் நாடு முன்னணி பெறமுடியும என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்கிறது? இவற்றிற்காக இதுவரை என்னசெய்திருக்கிறது? இத்துறையில் உழைக்க முன்வந்தவர்களுக்காவது ஆதரவு காட்ட முன்வந்ததா? ஆதரவு காட்டாவிடினும் கட்சிப் பற்றை ஒழித்துக் கட்டி, மன பேதங்களை நீக்கி, உழைக்க முன்வந்தவர்களுக்குத் தடைவிதிக்காமலாவது இருந்ததா?

தென்னிந்திய விஞ்ஞானி திரு. ஜி. டி. நாயுடு, விவசாயத்தில் புதுமைகளைச் செய்து காட்டினார்; பல புதிய பொருள்களைத் தயாரித்து மேனாட்டில் மார்க்கட் பிடிக்கும் வகையில் வேலை செய்தார், நாட்டிலே இஞ்சினியரிங் அறிவை வளர்க்க ஆக்கப்பணிகள் பல புரிய முன்வந்தார். அரசாங்கம் இவருக்கு ஆதரவு காட்டியதா? இல்லை முட்டுக்கட்டைகள இடாமலிருந்ததா? காங்கிரஸ் கட்சிக்கு உகந்தவராயில்லாதகாரணத்துக்காகவா இந்தநிலை?

போகட்டும்; இஞ்சினியரிங் கல்லூரிகளைப் பலபடப் பெருக்கி, தொழிற கல்வியை வளர்க்க இது காறும் என் அரசாங்கம திட்டமிடவில்லை? தக்ளியைச் சுற்றி, பஞ்சை நூலாக்கி, கைத்தறியில் அதை செய்யும் வித்தையை மக்களுக்குக் கற்பித்து, இதன்மூலம் மக்களை மேன்மேலும் பஞ்சைகளாகப் பராரிகளாக ஆக்கிவைக்கும் அற்புதக் கல்வித் திட்டத்தைப் போடத்தான் காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தோன்றிற்றே, ஒழிய நாட்டு மக்களின் உண்மையான முன்னேற்றத்தில் அக்கரையிருந்ததா?

ஆனால், இஞ்சினியரிங் கல்வி, கைத்தொழிற் கல்வி பெருகவேண்டும் என்று கூறுவதில் இந்த வாய்ப்பேச்சு வீரர்கள் ஒருநாளும பின்வாங்கியதில்லை.

கடவுள் பட்டியலில் மற்றுமொரு புதுக் கடவுள்

நம் நாட்டில் இதுவரை முப்பத்து முக்கோடி கடவுள்கள் இருக்கின்றன என்பதற்குப் பட்டியல் இருக்கின்றது. இவை போதாமல் நாயன்மார்கள, ஆழ்வாராதிகள், சித்தர்கள் போன்றோரும் இன்று கோயிலில் கடவுள்களாக அமர்ந்திருக்கிறார்கள். தாயுமானார், இராமலிங்கனார் போன்ற ஞானிகளும்இன்று கோயில்களில்கடவுள்களாக அமர்த்தப்பட்டுவிட்டார்கள்.

இவர்கள் போதாவென்று, ஸாயிபாபா போன்றவர்களும், பகவான் பலரும் கோயில்களில் இடம் பெறக் காத்திருக்கின்றார்கள். இவர்களோடு காந்தியாரையும் கடவுளாக்கும் திருப்பணி இப்போது நடந்து வருகிறது.

கோவாவில் ஒரு கோயிலில் காந்தியாரின் சிலையைக் கடவுளாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டது. இந்த முயற்சியை அங்கிருந்த மக்கள் எதிர்த்து, இது காந்தியாருக்குப் பிடிக்காத விஷயம் என்பதை எடுத்துக் காட்டி மறுத்தனர்.

நம் நாட்டில் இவ்வாறு மதிப்புக்குரிய தலைவர்களை யெல்லாம் கடவுளாக்குவதும், பிறகு புராணங்கள் எழுதுவதும, அவற்றைப் பாமர மக்களிடம் பரப்பி, அவர்களை முட்டாளாக்குவதுமாக உள்ள வேலை நீண்டகாலமாக நடந்து வருகிறது. இதனல் மக்கள் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது; அறிவுகுறை வைக்கப்படுகிறது.

இனியும் அதே நிலையையா நாட்டில் வளர்ப்பது? காந்தியாரின் சிலையைக் கோவிலில் வைப்பதாலா அவருக்கு மதிப்புப் பெருகும்! அறிவைப்பயன்படுத்தி, கோவிலில் அவரைக் கல் கடவுளாக்கி வைக்கும் இழி செயலைவிட்டு, அவரை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறித்து வைப்பதே சிறந்தது என்பதை மக்கள அனைவரும் உணர்ந்து, இத்தகைய கடவுளாக்கும் செயல் எங்கு நடந்தாலும் அங்கு அறிவைப் பெருக்கி, அறியாமையை ஒழிக்க அறிஞர்கள் அனைவரும் பாடுபட வேண்டுகிறோம்.

சூதாட்டத்தைக் குறிக்கும் வகையில், கும்பி கூழுக்கழுதாலென்ன!

குதிரைப்பந்தயம் ஒழியலாமா?

"குதிரைப்பந்தயத்தில் பல மக்கள் ஆர்வங்கொண்டு பந்தயங்கட்டி தோற்று ஏழ்மையாளராய் ஆயினர்; இசசூதாட்டம பலர் வாழ்வைப் பாழாக்கிப் பாராரிகளாக்கி விட்டபடியால் குதிரைப்பந்தயம ஒழிக்கப் படவேண்டியதாகும்."

இவ்வாறு கூறியவர்கள் பதவி ஏற்பதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ்காரர்கள்; பதவி ஏற்கும் வாய்ப்பு கிடைக்காதிருந்த காலத்தில்.

ஆனால் அதே காங்கிரஸ்காரர்கள் இன்று பதவி ஏற்றபிறகு, இந்தச் சூதாட்டத்தை ஒழிக்க மனம் வராதிருக்கின்றனர். மக்கள் பண மிழந்து, மானமிழந்து கும்பிக்குக் கூழில்லை என்று அலையும் நிலை ஏற்படுகிறது என்பதை கண்டறிந்துள்ள காங்கிரஸ்காரர்கள், இப்போது இதனை ஒழிக்க முன்வரவில்லை. இந்திய முதலமைச்சர் இதை ஒழிப்பதில் தீவிரம் காட்டவேண்டாமென்கிறார். முன்னாள் அமைச்சர் சுப்பராயன் இசசூதாட்டம ஒழிக்கப்படக்கூடாது என்கிறார்.

இவர்களுக்கு வக்காலத்துப்பேசு வதை ஒப்ப, பித்தாபுரம் யுவராஜா, குதிரைப்பந்தயத்தை ஒழித்துவிட்டால் குதிரை வளர்ப்புத்தொழில் குன்றிவிடுமென்று கூறிவிட்டு, மாகாணத்திற்குப பணம நஷ்டம வருமென மிரட்டுகிறார்.

பணநஷ்டம் வருமென்பதற்கு சினால்மதுவிலக்குஏன்? மது விலக்கு மக்கள் ஒழுக்கத்தைச் சரிப்படுத்த அவசிய மென்றால, சூதாட்டமும மதுவைப்போலப்பெருந் தீமைபயப்பதாக இருக்கின்றமையால ஒழிக்கப் படவேண்டியதே அல்லவா? இந்தயோசனை யேன்? தாமதமேன்?

பித்தாபுரம, குமாரமங்கலம ஜமீன்களுக்கு—கும்பி கூழுக்கழுகிறதென்கிற கதையும் [illegible] றிக் கவலை என்ன? குதிரைக்கு வளர்க்க முடியாமற் போய் [illegible] என்ற கவலை தான் அவர்களுக்குத் தோன்றும. கூழுக்கு [illegible] யில்லை என [illegible] முடியும்! [illegible] பருப்பு [illegible] பூவை என [illegible] கேட்கவோ, குங்கு [illegible] குறையை அறியவோ [illegible]

மாலை மணி

சென்னை 20—9—49 செவ்வாய்க்கிழமை

பணி தொடங்கட்டும் :: :: படை திரளட்டும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா, சென்னையம் பதியிலே-திராவிடத்தின் தலைநகரிலே, மக்களின் இதயத்தைத் தொடும் வண்ணம் சிறப்புற நடந்தேறிவிட்டது. அதனிடத்தே மக்கள் காட்டும் அன்பும், ஆதரவும், ஊக்கமும், உற்சாகமும், எத்துணை அளவு சிறப்புடன் காணப்படுகிறது என்பது, மழையிலும் நனைந்துகொண்டு, மனங்குலையாமல், ஆர்வத்தோடு ஒரு நூறாயிர மக்களும் வீற்றிருந்த நின்றிருந்த ஒரு பெருங்காட்சியே போதியசான்றாகும்.

'லேபில்' அல்ல - இலட்சியமே முக்கியம் என்பதைக், கொள்கைப் பற்றுக்கொண்ட இயக்கத் தோழர்கள் அனைவரும் இனிது நிலை நாட்டி விட்டனர்.

உயர்ந்த இலட்சியத்திற்கும்-உறுதியான கொள்கைக்கும்-உண்மை உழைப்புக்கும் என்றும் மதிப்பு உண்டு! கொள்கையிலே உறுதியும், உள்ளத்திலே உரமும், உழைப்பிலே திடமும் இருக்கும் வரையில், நாம் வெற்றி பெற்றே தீருவோம் என்பதைக், கழகத் தோழர்கள் தங்கள் வீரமுழக்கத்தின் மூலம் நாட்டிற்கு எடுத்துக்காட்டி விட்டனர்.

நமக்கு, **இலட்சிய நிறைவேற்றமே இனிய வழி—உருவான பலன்தராத 'லேபிலை'ப்** பெறுவதற்கான போராட்டமல்ல; பண்பாடே பெரிது—பகையல்ல; கண்ணியமே தேவை — கலவர எண்ணமல்ல; பணியாற்றுவதே முக்கியம் — சூழ்ச்சி புரியும் விளையாட்டல்ல; முன்னேற்றமே வேண்டியது — குழப்ப நிலையல்ல.

இப்பொழுது பாசிசமும் பழமையுமே நமது எதிரிகள் -பெரியார் அல்ல என்றமுறையில், நல்லெண்ணத்தில், **திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகி விட்டது.**

திராவிட முன்னேற்றக் கழகம்-தனிக் கழகம்-உண்மை உழைப்பாளிகளின் உணர்ச்சியின் மீது கட்டப்பட்ட கழகம், உருவான அமைப்பைக் கொள்ளும் கழகம், உயர்ந்த இலட்சியத்திற்காகப் போராடும் கழகம், இனபதிராவிடத்தைக் காணும் கழகம், திராவிடர் இயக்கத் தோழர்களின் இதயத்திலே இடம் பெற்றுவிட்ட கழகம்! புதிய கழகம்! புதுமணங் கமழுங்கழகம்!

பணிபுரிவோர்க்குப் பண்பட்ட பாதை அமைந்து விட்டது- அமைத்துவிட்டோம்! இனி யாரையும் பொருட்படுத்தவேண்டிய அவசியமில்லை-நமது பாதையில நாம் தலைநிமிர்ந்துபெருமிதத்தோடு செல்லலாம், அதற்கேற்றபடி அருமையான, தூய்மையான உண்மையுள்ள வழியை வகுத்துக்கொண்டு விட்டோம். இலட்சியபுரி நோக்கிச் செல்லும்போது, இடையே கேலியும் கிண்டலும் குரைக்கும்! அது குறித்துக் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. கேலியும் கிண்டலும், தானாக ஒடுங்கிவிடும்; குரைப்பினால் ஏற்பட்ட வலியைப் பிறகு அவை உணரும். அல்லாததும், பொல்லாததும் ஊளையிடும்! அது காதுக்கு வலியாக இருக்கும், நமமுடைய கவனம் இலட்சியத்திலே பதிந்துவிட்டால், காதுக் குடைச்சல் ஏற்பட வழியிருக்காது. கேலி, கிண்டல, இல்லாதது, பொல்லாதது, சூழ்ச்சி, வஞ்சகம், பொறுமை, பொய்த்தோற்றம், எல்லாம் குறுக்கே வரும, அவற்றை அகற்ற, நாம கொள்ளவேண்டிய ஒரே வழி **அலட்சியம்!**

நமது ஆற்றலை நாடு நன்கு அறியும், நல்லோர் தெளிவாக அறிவார்கள், நம்முடைய-திராவிட முன்னேற்றக் கழகத்தவருடை எதிர்காலவாழ்வு நாம் ஆற்றிக்காட்டும் பணிகளைப் பொறுத்துஇருக்கிறது. நாட்டிற்கேற்ற நல்ல பணிகளைச் செய்து காட்ட நம்மிடத்திலே ஆற்றல் தேவையான அளவுக்கு இருக்கிறது, அந்த ஆற்றல் எவ்வழி நோக்கினும் வளரும் தன்மையில் தான் வளப்பமுடன் இருக்கிறது. பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டிக்கொள்ள நமக்குத் திறமையுண்டு. ஆகவே பணிபுரிவோம்- அறிவுப்படை திரட்டுவோம்- அதுதான்இன்றைய நிலையில் கழகத் தோழர்களின் முக்கிய பணி- முதன்மைப் பணி.

18-9-49 ம் நாள் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் குழு, தீர்மானித்தபடி, கிளைக்கழகங்களை ஆங்காங்கு நிறுவுவதும், உறுப்பினர்கள் சேர்ப்பதும் ஆகிய அமைப்புச் செயல்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதேஇயக்கத்தோழர்களின் இன்றியமையாத கடமையாகும்.

அக்டோபர் திங்கள் 16-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை, மாகாணமெங்கும் துவக்க விழா நாளாகக் கொண்டாடும்படி கழகத் தோழர்களை அமைப்புக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி பல முக்கிய சொற்பொழிவாளர்கள் முக்கிய நகரங்களிலெல்லாம், துவக்க விழாவை ஆற்றிவைப்பார்கள். வெளியூரிலிருந்து சொற்பொழிவாளர்களை வரவழைத்துக் கொள்ளமுடியாத நிலையிலுள்ள ஊர்களில், கழகத் தோழர்கள், உள்ளூரிலுள்ள சொற்பொழிவாளர்களைக் கொண்டே திராவிட முன்னேற்றக் கிளைக் கழகத்திற்குத் துவக்க விழாவை அந்த நாளிலேயே ஆற்றிவைத்து விடுவதே நல்லதாகும். கழகங்களை அமைத்துக்கொளளும் நிகழ்ச்சி, அதற்கு முன்பே நிறைவேறிவிடவேண்டும.

ஆகவே, கழகத் தோழர்கள் மற்றைய வேறுபட்ட கழகத்தவரோடு பகைகொள்ளாமல் தம்முடைய பண்பட்ட கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்வதே பொறுப்புள்ள கடமையாகும். நம்மைப் பகைவர்களாகக் கருதுவோர் கண்ணியத்திற்கு மதிப்பு அளிக்க மறுத்து ஏதேதோ முறைகளைக் கையாளலாம்! அவர்களைக் கட்டுப்படுத்த நமக்கு உரிமையில்லை, ஆனல் நம்முடைய கண்ணியத்தைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும். நம்மிடத்திலே- திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடத்திலே என்றும் பெருந்தன்மை நிலவியிருக்கட்டும்; மற்றவர்களைப் பற்றிக் கவலை வேண்டாம்! நமது நோக்கம் நல்லநோக்கம்; அது நிச்சயம் வெற்றிபெறும். திராவிடத்தின்மாணவர்களே! இளைஞர்களே!-பெரியோரே!-பெண்டிரே- பாட்டாளி மக்களே!- தொழிலாளத் தோழர்களே! **திராவிட முன்னேற்றக் கழகம்** உங்கள் உழைப்பின் உருவம்-உங்கள் உணர்ச்சியின் எழுச்சி-உங்கள் இதயஒலியின் ஒரு பெருஞ் சின்னம்! அதை வளர்ப்பதும், வாழவைப்பதும் உங்கள் கடன்! உங்கள் கடன்தான்! உங்கள் கடன் என்று உணர்வீர்கள் என்பதிலே எமக்கு நம்பிக்கையும் உண்டு, உங்கள் மனப்போக்கு நல்லவை பக்கம் திரும்பும் என்பதை நன்கு அறிந்துள்ள காரணத்தால்!

எனவே, பணி தொடங்கட்டும்! அறிவுப்படை திரளட்டும்! வெற்றி நமதே!

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழுக் கூட்டம்

சென்னை, செப். 18— "திராவிட முன்னேற்றக் கழக" அமைப்புக் குழுவின் கூட்டம் இன்று காலை சென்னை பவழக்காரத் தெரு, 7-ம் எண் கழக அலுவலகக் கட்டிடத்தில் தனி அறையில் நடைபெற்றது. அமைப்புக் குழு உறுப்பினர்களான தோழர்கள் கே. கே. நீலமேகம், கே. வி. கே. சாமி, எஸ். முத்து, ஜி. பாளங்குசம், ஏ. சித்தையன், கே. கோவிந்தசாமி ஆகியோர் வந்திருந்தனர்.

தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

(1) இந்த அமைப்புக் குழுவுக்கு அடியிற் கண்டவர்களையும், அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ள, இந்தக் கமிட்டி முடிவு செய்கிறது.

(i) என். வி. நடராசன்-சென்னை

(ii) பழனியப்பன் — குறிஞ்சிப்பாடி (தெ. ஆ.)

(iii) எம். நடேசன்—திருப்பத்தூர் (வ. ஆ.)

(iv) வெங்கடாசலம் —உடுமலை (கோவை)

(v) எம். சின்னையா —செங்கற்பட்டு

(vi) எம். எஸ். ராமசாமி—அருப்புக்கோட்டை (இராமநாதபுரம்)

(2) இந்த அமைப்புக் குழுவுக்குத் தோழர் என். வி. நடராசன் அவர்களை செயலாளராகத் தேர்ந்தெடுக்கிறது.

(3) திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களைக் கொண்ட குறிப்புடன் கூடிய அங்கத்தினர்கள் சேர்க்கும் புத்தகங்களை, உடனடியாக (1,00,000) ஒரு இலட்சம் அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கு ஏற்ற அளவில் அச்சு இயற்ற வேண்டுமென்று தீர்மானிக்கிறது,

(4) அங்கத்தினர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 0-4-0 (நான்கு அணா) கட்டணம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதில் கிளைக்கழகத்திற்கு ரூ. 0-2-0ம், ஜில்லா கழகத்திற்கு ரூ. 0-1-0ம், மாகாணக் கழகத்திற்கு ரூ. 0-1-0ம் ஆக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(4) அக்டோபர் மாதத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு மாதமாகக் கொண்டு, எல்லா ஊர்களிலும், பொது உறுப்பினர்களைச் சேர்க்குமாறு கழக அன்பர்களைக்கேட்டுக்கொள்கிறது. அந்தப் பொது உறுப்பினர்களைக்கொண்டு,ஒரு செயலாளரும் செயற்குழு உறுப்பினருங்கொண்ட கழகங்களை அமைத்து, அதன் விபரங்களை (இரசீதுகளுடன்) சென்னையிலுள்ள பொதுச் செயலாளரின் அலுவலகத்திற்கு (7, பவழக்காரத் தெரு, சென்னை) அக்டோபர் 31-ந் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

(5) அக்டோபர் 16-ந் தேதியன்று மாவட்டங்களின் முக்கிய ஊர்களில், கழகத் துவக்க விழாவைக் கொண்டாடுவதென்று இக் கமிட்டி தீர்மானிக்கிறது, என்பதாகும். எனக் குழுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் எழுதுகிறார்கள்.

மறுப்பு

குகை(சேலம்)செப், 15.— "14-9-49 தேதி விடுதலையில் குகை திராவிடர் கழகத்தில் பெரியாரின் அறிக்கைப்படி இந்திஎதிர்ப்புக் கூட்டம்நடத்தப்பட்டதாகவும், செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றதாகவும் வெளிவந்துள்ள செய்தியை நான் மறுக்கிறேன். கை கூட்டம் நடந்தது எனக்குத் தெரியாது. அப்படி இருக்க எப்படி நான் நன்றி கூறி இருக்க முடியும்? ஆயைால் பெரியார் ஆணைக்கிணங்க நான் கூட்டத்தில் நன்றி கூறியதாக உள்ளச் செய்தியை தவறு என்று தெரிவித்துக் கொள்கிறேன்." என சேலம் குகை திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பி. வெங்கட்ராம் எழுதுகிறார்.

கிளைக் கழகம் அமைக்கும் முறை

திராவிட முன்னேற்றக் கழகத்திலே பற்றுதல் கொண்டுள்ள கழகத் தோழர்கள், முதலில் உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

உறுப்பினர்கள் பதிவாகிக் கொள்ளும் ரசீது புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அது விரைவில் அந்தந்த மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் மூலம் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அது வரையில், அன்பர்களின் கையெழுத்துக்களை வாங்கிக் கொண்டு, அதன் மூலம் தற்காலிகமாகப் பதிவு செய்து கொள்ளலாம். பின்பு ரசீது புத்தகங்கள் வருமபோது, சந்தாக் கட்டணத்தைச் செலுத்தி, ரசீது பெற்றுக் கொண்டு, அந்த முறையில் நிலைத்த உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி, செயற்குழு ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டு, செயலாளர் ஒருவரையும் ஏற்படுத்திக் கொண்டு, ஊர்தோறும் கிளைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும். மாகாண மாநாடு கூடி முறையான அமைப்பு ஏற்படுகிற வரையில் இது தற்காலிக ஏற்பாடாக இருந்துவரும்.

செயலாளரைப் பிரதானமாகக்கொண்டே கிளைக் கழகச் செயற்குழு அமைக்கப்பட வேண்டும்.

செயலாளரைத் தவிர, நிதியைக் கவனித்துக்கொள்ள நிதி உறுப்பினர் ஒருவரும், விளம்பரப் பகுதியைக்கவனித்துக்கொள்ள விளம்பர உறுப்பினர் ஒருவரும் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமான பிரச்சினைகளைச் செயற்குழு கூடி முடிவு செய்ய வேண்டும்.

கழகத்தின் நடவடிக்கைகளை அவ்வப்போது, தலைமைக் கழக அலுவலகப் பொறுப்பாளருக்கு அறிவித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

விளம்பரஞ் செய்ய வேண்டிய செய்திகளை தலைமைக் கழகத்திற்கு அனுப்புவதோடு மட்டுமல்லாமல், "மாலை மணி" இதழுக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

ஜில்லாக் கழகங்கள் கிளைக் கழகங்கள் அமைந்த பிறகே அமைக்கப்பட வேண்டியிருப்பதால், உறுப்பினர் சந்தாவில் 2 அணாவைக் கிளைக் கழகத்திற்கு வைத்துக் கொண்டு மீதி 2 அணாவைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

துவக்க விழா ஆற்றப்படுவதற்கு முன்பு கிளைக் கழகங்களைச் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும் அமைக்கக் கழக அன்பர்கள் பாடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

ஏ. பொன்னுச்சாமி, கோவை.

ஏ. சித்தையன், சேலம்.

சிவராமகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

முருகு. சுப்பிரமணியம், புதுக்கோட்டை.

இலட்சியந்தான் பெரிது-'லேபில்' அல்ல

தொண்டு புரிவோம்: திறமைகாட்டுவோம்

புதிய கழகம்—முன்னேற்றத்தின் அறிகுறி

இரா. நெடுஞ்செழியன்

நேற்றுவரை திராவிடர் கழகமாக இருந்தது. இன்று திராவிட முன்னேற்றக் கழகமாகக் காட்சியளிக்கிறது. இதுவரை திராவிடர் கழக மேடைகளிலே காட்சியளித்தவர்கள், இன்று "திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடையிலே காட்சியளிக்கின்றனர். திராவிடர் கழகம்-திராவிட முன்னேற்றக் கழகம்-இந்த இரண்டு சொற்றொடர்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் "முன்னேற்றம்"தான் மிச்சம். நிலைமை, அதுதான். முன்னேறியிருக்கிறோம்.

மூன்று மாதமாக ஸ்தம்பித்துக் கிடந்தது கழகம். என்? கழகத் தலைவர் கழகக் கொள்கைக்கு மாறுகத் திருமணம் செய்துகொண்டார். சீரிய முறை அல்ல என்று எடுத்துக்காட்டினோம். எத்தர்கள் என்றார். மறுத்தார்—மணம் புரிந்து கொண்டார். இது திரு மணமல்ல. வார்சு ஏற்பாடு என்றார். வார்சு எற்பாடா? அப்படியானால் ஏற்பாட்டுக்காக — திருமணம் என்ற உயர்ந்தவார்த்தை—கருத்து—பாழ்படுத்தப் படுகிறதே என்று எடுத்துக் கூறினோம். வார்சு உங்கள் நாடுதானே, என்றோம். எல்லோரையும் சுயநலமிகள், சதிகாரர்கள் சூழ்ச்சிக்காரர்கள் என்று தூற்றினார். பெரும்பாலோர் அவரைக் கண்டித்தனர். அப்போதும் அவர் விலக வில்லை. விலக்க நாம் விரும்ப வில்லை. பெருந்தன்மையோடுவிலகி விட்டோம் நாம். நமது கொள்கைக்காக நாம் புது அமைப்பில் வேலை செய்வோம்.

நமது கொள்கை, சாகரடீஸ் காலமுதல்-பெரியார் இராமசாமி காலம்வரைப் பற்பல அறிஞர்களும்-வீரர்களும் கொடுத்த கருத்தை, கொள்கையை நாம்தொடர்ந்து அறிவுப்படைத்திரட்டும் பணியை மேற்கொண்டு நடத்துவோம். திராவிடர் கழகம் என்ற லேபிலை விட்டு விலகி, திராவிடமுன்னேற்றக்கழக முகாமில் கூடியிருக்கிறோம். மாறுதல் என்ன? "முன்னேற்றம்" தான்.

மோதுதல் இருவருக்கும் கேடு பயக்கும். குழப்பத்திற்கு மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு வாய்ப்புத் தருவதாகும். வீம்பு பெரிதல்ல, வீரம் பெரிதல்ல. ஆனால் கண்ணியம் பெரியது, பெருந்தன்மையே பெரியது என்று திராவிட முன்னேற்றக் கழகம அமைத்தோம். அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடவேண்டும். பொருளாதாரத்துறையிலே சமதர்மக் கொள்கை வேண்டும். சமுதாயச் சீரழிவுகள் போக்கப்பட வேண்டும் என்ற மூன்று கொள்கைகள், திரிசூலத்தைக் கையிலேந்தி—போரிடுவோம். அறிவுப்படை திரட்டுவோம், நடெங்கும் அதுவே நமது முன்னணி வேலை.

தலைமையின் போக்குப் பிடிக்க வில்லை, கண்டித்தோம். லேபில் வேண்டாம் என்று கூறிவிட்டுப் புது முகாம் அமைத்துள்ளோம். முயன்று பணி புரியுங்கள்.

மதுரை(அழகரடி)எஸ். முத்து

திராவிடக் கழகத்தில் நானோ, என் போன்ற தொண்டர்களோ சேர்ந்திருக்கிறோமென்றால் அதன் கொள்கைகளுக்காகத்தான், சேர்ந்திருக்கிறோம். சமுதாயச் சீர்திருத்தம் பேசினோம். அதற்கு முரணாகத் திருமணம் புரிந்து கொண்டார் பெரியார். அது மட்டுமல்ல—பொதுவுடைமை, பொதுவுடைமை யென்று பேசி வந்தப் பெரியார், தனக்கென்றும், தன் உடைமைக்கு வாரிசு என்றும் பேசிப் பிரிந்தால், அதற்காகத் தம்முடைய சீர்திருத்தப் பிரசாரத்திற்கே பொருந்தாத் திருமணம் செய்துகொண்டார். அதைக் கண்டித்த ஊழியர்களை உதாசீனப்படுத்தினார். பகுத்தறிவுக்குப் புறம்பாகத் தலைவரே நடந்தாலும் தவறு; தவறு தான் என்று அவர் தலைமையைத் தள்ளிவிட்டோம். தனியாக திராவிட முன்னேற்றக் கழகமும் அமைத்துவிட்டோம். கொள்கையை விடோம், காப்பாற்றியே தீருவோம். அதற்காக வேலை செய்யுங்கள் என்று வேண்டுகிறேன்.

குடந்தை கே. கே. நீலமேகம்

நான் சென்ற 19-வருடக் காலமாகப் பெரியாரை பின்பற்றுபவன். இதுவரை அவர் கருத்துக்கு மாறுபட்டவனல்ல. பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கேள்விப்பட்டவுடன் நான்ஏற்காட்டிற்குச்சென்று பெரியாரைப் பார்த்து "நீர் இவ்விதம் செய்வது சற்றும் பொருந்தாது என்றும், இன்றைய விஞ்ஞான, வாலிப உலகு அதனை ஏற்காது, மதிக்காது, உம்மால் இதனைச்சமாளிக்க முடியாது என்றும் அந்த யோசனையை கைவிட்டுவிடும் என்றும் கூறினேன். அதற்கு ஐயா அவர்கள் "அப்படியா? சிந்திப்போம், யோசித்து முடிவு செய்யலாம்" என்றார். பின்னால் சென்னையில் பார்த்தபோதும் அதையே சொன்னார். நான்ஜூலை 10-ந்தேதி திருச்சி நிர்வாகக் கமிட்டி கூட்டத்திறகுப் போவதாகக் கூறிச் சென்றேன். சரி போய் வாருங்கள் பிறகு பார்ப்போம் என்றார். ஆனால் அந்த பேச்சு நிற்கவில்லை. பிறகு 10-ந் தேதி கமிட்டி நடப்பதை மதிக்க வில்லை. 9-ந் தேதியே திருமணம் முடித்துக்கொண்டார் சந்தடியின்றி. நம்மை மதியாத தலைவரை நாம் மதியோம். கொள்கையை விட்ட தலைவரின் கீழ்ப் பணிபுரிய மாட்டோம்.

திருமணம் அவர் சொந்த விஷயமல்ல; அவர் நாட்டின் சொத்தாகத் தான் விளங்கினார். மக்களும் அவரைத் தமது சொத்தாகத்தான் கருதி வாழ்ந்தனர். அப்படியிருக்க அவர் எனது சொந்த விஷயம் என்று கூறுவது பொருத்தமல்ல. ஆனால் அவர் அப்படியே கூறிவிட்டார். அது மட்டுமல்ல, செய்தது தவறு என்று கூறுவதே குற்றம்; சதிசெயல் என்றுவேறு குற்றம் சாட்டிவிட்டார். அப்படிப்பட்ட தலைவரை நாம் ஏற்றுக் கொள்ள வில்லை. ஆகவே, சொல்லுக்காக, கொள்கையைக் காப்பாற்ற வேண்டிப்புதுக்கட்சி, திராவிடமுன்னேற்றக் கட்சி, ஒட்டுமொத்தமாக, அமைத்திருக்கிறோம்.

இது திராவிடர் கழகத்திற்குப் போட்டியல்ல, அதைஎதிர்ப்பதல்ல; அதன் அடிப்படை இலட்சியத்தைத் தான் இது கொண்டது என்று கூறி விடுகிறேன். இலட்சியம் ஒன்றுதான், ஆனால் கட்சி வேறு. தலைமை பிடிக்கவில்லை. ஆகவே பெருந்தன்மையோடு விலகி விடுகிறோம். எமது முன்னேற்றக் கழகத்திற்குப் பெரிதும் ஆதரவு கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தோழியர் சத்தியவாணி முத்து

நாம் இன்று கூடியுள்ளது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரால். அதாவது திராவிடர் கழகம் என்ற லேபிலுக்குச் சீட்டுக் கொடுத்து விட்டோம். தலைவர் வழுக்கி விழுந்து விட்டார், அவமானம் நம்மால் தாங்கமுடியவில்லை. கண்டித்தோம், கண்ணீர் விட்டோம், கதறினோம்-கண்டித்தோம் பலன் இல்லை, போக்கு மாறவில்லை. நம்மைத் துரும்பளவு மட்டுமல்ல, அதைவிடக் கேவலமாகக்கருதினார். அதுதான் இந்த மாற்றத்திற்குக் காரணம். நமது வேலை மிகவும் முக்கிய மானது பொறுப்புணர்ச்சி மிக்கது. எனவே யாவரும் ஒருமனதுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடுவோமாக.

[தோழர் அண்ணாதுரை சொற்பொழிவு பின்னர் வரும்]

கே. வி. கே. சாமி, தூத்துக்குடி.

சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சிபுரம்.

இராம. சுப்பையா, காரைக்குடி.

என். எம். சுப்பிரமணியம், சென்னை.

நூலின் விலையைக் குறைக்காமல் நிலைமை சீர்ப்படுமா?

இலாப வேட்டையை முதலாளிகள் கைவிடுவார்களா?

தென்னிந்திய மில்கள் உற்பத்தி செய்துள்ள நூலுக்கு மார்க்கட் இல்லாமல் நூல் தேங்கிக் கிடக்கிறதென்றும், இதனை விற்றுவிட இந்திய அரசாங்கம் வழி ஒன்றும் செய்யவில்லை என்றும் தென்னிந்திய மில் சொந்தக்காரர்கள் சங்கத்தினர் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

நூல் அதிகமாகத் தேங்கிவிட்டதென்றால், நூலின் விலையைக் குறைத்து, கைத்தறி நெசவாளர்களுக்குத் தாராளமாக நூல் கிடைக்குமாறு வழி செய்து, இந்நூலைக்கொண்டு அவர்கள் நெய்யும் துணிகள், மார்க்கட்டில் மக்கள் விரும்பி வாங்கக் கூடிய குறைந்த விலையுடையவைகளாக அமையுமாறு செய்து விட்டால், தேங்கிக்கிடக்கும் நூல், பல்லாயிரக்கணக்கான கைத்தறிகளில் புகுந்து துணிகளாக உருப்பெற்றுவிடுமே. இதனால் மில் முதலாளிகளுக்கும் நூல் தேங்கும் தொல்லை ஒழியும். கைத்தறி நெசவாளர்களும் தொல்லையின்றி வாழுவர்.

இதைவிட்டு, இன்னுமபோக்கால உச்சவிலை கூறும் நிலையில் மில் முதலாளிகள் இருந்தால், இன்னும் பெரிய இலாபத்தின் மீது கண்ணும் கருத்துமாக இருந்தால், இவர்களுக்கு நூல் தேங்காமல் என்னாகும்? இந்திய அரசாங்கம் உதவி செய்யுமென்று இவர்கள் எதிர்ப்பார்ப்பதும் பயன் தரக் கூடியதாக இருக்குமென்று தோன்றவில்லை. ஆகவே தென்னிந்திய மில் முதலாளிகள் நூலின் விலைவாசிகளை ஒன்றுக்குப் பாதியாகக் குறைத்து, தரகர்களின் உதவியில்லாமல், நெசவாளர்களுக்கு நேரடியாகக் கிடைக்குமாறு செய்ய முன்வந்து தங்களையும் காத்துக் கொண்டு பிறரையும் காக்க முன்வருவார்களா?

40 கோடி மக்கள் வாழ்வு

200 பேரைக்கொண்டு முடிவு செய்வதா?

"இந்த நாட்டு மக்கள 40கோடிப் பேருடைய வாழ்க்கைத்திட்டத்தை வகுக்க, 200பேர் அரசாங்கக் காரியாலயத்திற்குள் உட்கார்ந்து கொண்டு, தம் விருப்பம் போல் வேலை செய்வது அடியோடு கண்டிக்கப் பட வேண்டியதாகும்" என்கிறார் சர். சி. வி. இராமன்.

இந்த நாட்டிலே மக்களின் வாழ்க்கை நிலை அறியாதவர்களாய் எதேச்சாதிகார ஆட்சி புரிந்தனர் வெள்ளையர், என்பதைக் காங்கிரஸ்காரர்கள் அன்று எடுத்துக் காட்டினர். ஆனால் இன்று அதே வெள்ளையர் போக்கைப் பின்பற்றிக் காங்கிரஸ்காரர்கள், மக்கள் நிலையை அறியாதவர்களாய், மக்கள் நல்வாழ்வைப்பற்றிக் கவலைப்படாதவர்களாய் எதேச்சாதிகாரப்போக்கில், மக்கள் நிலையைத் தங்கள் விருப்பம்போல் அமைத்து வருகின்றனர். இவ்வண்ணம் ஒரு சிலர் கூடிக்கொண்டு, கட்சியின் பெயராலோ, ஆட்சியின் பெயராலோ 40 கோடி மக்களின் வாழ்வை நிர்ணயம் செய்வது என்னும் செயல், எத்துணைக் கொடியது, சர்வாதிகாரப் போக்குடையது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. இந்தத் தவறான நிலையை நன்கறிந்தே சர். சி. வி. இராமன், இந்நிலையைக் கண்டனம் செய்து கோயமுத்தூரிலே பேசினார். இவரது கருத்து மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்கது. காங்கிரஸ் கட்சியின் போக்கு எத்தகையது என்பதை மக்கள் இனிமேலும் உணர்வார்களா?

சேராதீர்கள்! சேராதீர்கள்...

[முன் பக்கத் தொடர்ச்சி]

சியிலே இந்த அநீதி இருக்க லாமா' என்றால், 'இரைதேடிக் கிளம்பும் பசித்த புலிபோல் பாய்ந்து வருகிறது பாராளுவோரின் அடக்குமுறை பாணங்கள்' நீதி கேட்கும் உரிமையைப் பட்சிக்க! 'அமைதியாகச் செல்லும் ஊர்வலத்தைத் தடிகொண்டு தாக்கிக் கலைப்பதா' என்று உள்ளத் துடிப்போடு மக்கள் கிளப்பும் அழுகுரலை அடக்கக் "காருண்யவான்கள்" விடும் கணைகள் கருநாகமெனச் சீறிக்கொண்டு வருகின்றன! 'புரியாதீர் இச்சிறு செயலை, கறைபடுத்தாதீர் காந்தியின் நாமத்தை; களங்கம் தேடாதீர், மக்களாட்சி மாண்புக்கு, மக்கள் உரிமைகளை-நெஞ்சில் பட்டதைக் கூறும் நன்னெறியை-நாட்டில் காண்பதைக்கூறும் குணத்தை-மக்கள் போரிடும் சக்தியை-அழிக்கமுற்படுவதல்லாட்சி ஏற்பாட்டைத் தடுத்து நிறுத்தும் சிலபல காலத்திற்கு'-என்று ஆளவந்தார்கள் மீது அன்புகொண்டோர், அன்பின் காரணமாகக் குறிப்பாகக் காட்டினாலும், 'ஆ! ஹா!' விட்டேனா பார்! என் அதிகாரத்தை அறிந்து பேசு' என்று அடக்குமுறைகளைத் தூக்கி எறிய இரு கரங்கள் போதாதற்குக் கவலைகொண்டு ஆர்ப்பரிக்கிறார்கள் அலுவலகங்களிலே! ஆளவந்தார்களின் இராமராஜ்யம் நடக்கிறது இந்த ரீதியில்!

இந்த அடிப்படை உரிமைகளை—ஒவ்வொரு பிரஜைக்கும் எந்தக் காலத்திலும்—எந்த நாட்டிலும்—எவர் ஆட்சியிலும் இன்றியமையாது இருந்து தீரவேண்டிய குடி உரிமைகளை கேட்போம், என்று அதை ஒன்றையே தம் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டுபணிபுரிவோர், அரசியல் மாச்சரியங்களிலே கலந்துகொள்ளாத-கொள்ளப் பிரியப்படாத-நேர்மதியாளர், செய்துவரும் நற்பணியில் நாட்டத்தைச் செலுத்தல், அறவே காங்கிரஸ்காரர்களுக்கு ஒத்து வாராத பெரும்பிணி என்று, காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீத்தாராமையா செப்பினார் இரண்டொரு நாட்களுக்கு முன்பு!

'குடி உரிமைக் கழகங்கள்' ஆற்றும்பணி, நோய்ப்பிணியென்று கொண்டிருக்கிறார் பட்டாபி சீத்தாராமர். மக்கள் உரிமைகாக்கும் உயர்ந்தபணியை, ஏன் சீத்தாராமர் கொடும்பிணியாகக் கருதுகிறார் தெரியுமா?

"நடப்பது காங்கிரஸ் ஆட்சி. எனவே, காங்கிரஸ் கட்சியினர் குடியுரிமைக் கழகங்களில் பங்கு கொள்ளுதல் கூடாது." இது, பட்டாபியின் வாதம்! இல்லை-பிடிவாதம்!

பிகார் காங்கிரஸ் கட்சியினருக்கு, இது போன்ற 'பதவா' பிறப்பித்திருக்கிறார் பெருந்தகை பட்டாபியார்!

என்ன இதற்குப்பொருள்? "ஆட்சி பீடத்திலே நாம் வீற்றிருக்கிறோம்! நாம் அடக்குமுறைகளைக் கொண்டு மக்கள் உரிமைகளை நித்தம் நித்தம் கெடுக்கிறோம்! எனவே, குடி உரிமை கழகத்தில் பங்கு கொள்ள நமக்கு தார்மீக பலமில்லை! ஆதலால் குடி உரிமை கழகப்பணியில் பங்குகொள்ளாதீர்!"

என்பதுதானே, உண்மைப் பொருளாக இருக்க முடியும்.

பட்டாபியின் கட்டளைக்கு?

சில நாட்களுக்கு முன், இதே பட்டாபியார், முன்னாள் தாங்கள் செய்ததாகச் சொல்லப்படும் தியாகங்களுக்குப் பரிசாக, கட்டுப்பாடு பொருள்களை விற்பனைசெய்து பணம் திரட்டும் பணியில், மற்றவியாபாரிகளோடு காங்கிரஸ் தியாக மூர்த்திகள் ஏன் போட்டியிடக் கூடாது என்று கேட்டிருக்கிறார்! பொதுமக்கள், மறந்துவிட்டாலும் காங்கிரஸ்காரர்கள், அதனைக் கனவிலும் மறக்க முடியாத பண்பாடு உடையவர்களாயிற்றே என்பதை டாக்டர் பட்டாபியார் அறிய மாட்டாரா என்ன? பாம்பின்கால் பாம்புதானே அறியும்! குருநாதர் போலத்தானே, அவர் வழிவந்தவர்களாக, அவர்தம் சீடர்களும் இருப்பார்கள்! இதுவும் குருநிலை பெற்றுள்ள டாக்டருக்குத் தெரியாமல் இருக்க நியாய மில்லையே!

ஆம்! காங்கிரஸ் கட்சியினர், நாடாளும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளனர்! பலப்பல ஆண்டுகளாகக் காடுமேடு-வனம் வனாந்தரங்களை-எல்லாம் சுற்றித்திரிந்தவர்கள், இன்றுதான் சுகம் பெறும் சாதனத்தைக் கண்டுள்ளார்கள்-கைவசத்தில் பெற்றுள்ளார்கள்! அவர்கள் அந்த இடத்தில் இருந்து கொண்டு, சொந்த நிலையை உயர்த்திக்கொள்ளும் அரிய வாய்ப்பினை இழக்கக் கூடாது என்பதுதான் நமது விருப்பம்! இந்த சமயம் தவறின் மறு சமயம் வாய்ப்பது அரிது! அந்த வழியை-சுகந்தரும் பாதையை மறந்து விடாதீர்கள், அதிகாரத்தில அமர்ந்துள்ள ஆளவந்தார்களே!

மானிடராகப் பிறத்தல் அரிது! அதிலும் காங்கிரஸ்காரர்களாகப் பிறத்தல அரிது அரிது! அதிலும் சட்ட சபை உறுப்பினர்களாகப் பிறத்தல் அரிது அரிது! அதிலும் அமைச்சர்களாகப் பிறத்தல் அரிது! அரிது! அ—ரி—தே!! புது ஔவையாரின் அரிய கண்டுபிடிப்பு இது!

காங்கிரஸ்காரர்களில் மற்றோர் சாரார் உண்டு. அவர்கள்தான், ஐந்து ஏக்கா தியாகிகள்! 'ஆளுகிறவர்கள் நம்மக் கட்சியினர்! நமக்கு ஐந்து ஏக்கர்தானு ஆதாயம்!' என்று நினைவிழந்து கொண்டு, பெர்மிட்டுக்குப் பல்லிளிப்போர், லைசென்சுக்கு லங்கணம் இருப்போர், மனுபோடுவோர்-மிரட்டுவோர், அனைவரும் இந்த இரண்டாம் இரகத்தினர் ஆவர்!

ஒரு இரகம் ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு இருக்கிறது. மற்றோர் இரகம், ஆட்சி பீடத்தைக் காட்டி நாட்டில் ஆர்ப்பாட்டம் செய்து வருகிறது. எனவே, இந்த இரு இரகமும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு இருக்கத்தான் இருக்கும். பட்டாபியின் போதனையின் தாத்பரியமும் அதுதான்!

குடிஉரிமை காப்புக்கு, இந்த இரண்டாம இரகத்தைச்சார்ந்த காங்கிரசார் போரிட முடியாது-கூடாது. இவர்களிடம், மக்கள் நம்பிக்கைக்கொள்ளவுமாட்டார்கள். அந்த அளவிற்கு இவர்கள், பொது அறநெறியில் இருந்து விலகி நிற்கிறார்கள்!

வேண்டாம் இவர்கள் ஒத்துழைப்பு-கூட்டுறவு-குடி உரிமைக் கழகங்களுக்கு!

அந்தத் தூய்மையான குடியுரிமை காக்கும் பணிக்கு, தூய்மை நிலையை விட்டு வெகு தொலைவில் சென்றுவிட்ட காங்கிரஸ் தியாகிகள் தகுதியிழந்தவர்கள்தான்! பெர்மிட்டுக்குப் பதைபதைப்போர், லைசென்சுக்கு காவசைப போர், பதவிக்குப் போரிடுவோர், எல்லா வழிகளிலும் பணந்திரட்டப் பாய்ப்புக் காட்டுவோர் போன்ற காங்கிரஸ் துணைவர்கள், தங்கள் கறைபிடித்த கரங்களால், குடி உரிமைக் காக்கும் பணியினைத் தீண்டவும் கூடாது! ஆம்! உயர்ந்த அப்பணிக்குப் பழுது ஏற்படும்! அக்கழகங்களின் அருகிலும் இவர்கள் அண்டுதல் அடாது-கூடாது! டாக்டர் பட்டாபியின்வாயுரைப்படி, இந்த இரண்டாம் இரகக் காங்கிரஸ்காரர்கள் போட்டியிடட்டும், பணம் திரட்டும் பணியில்! கிடைத்த வாய்ப்பு, நழுவிஓட்டு மக்கள் கைகளை அடைவதற்கு முன்னமே, காங்கிரஸ்காரர் தங்கள் தங்கள் பணப்பசியைத் தணித்துக் கொள்ள முந்துவார்களாக! வெற்றி பெறட்டும், தியாகிகள், அப்போராட்டத்தில் தப்பித்தவறி நேர்மை நினைப்பு ஏற்படுகிற வேளையில், நேர்மைப் பண்புக்கு பலியாகி விடாமல் இருப்பதற்கு, டாக்டர் பட்டாபி சீத்தாராமையாவின் போதனை-அறநெறி ஊக்க மூட்டும் என்பதில் சந்தேகமில்லை! வேலூர் சிறையில், டாக்டர் நடந்து கொண்ட விதத்தையும், விளக்கமாக விரிவுரை யாற்றி இருந்தால், சீட கோடிகளுக்குப் பெருந்துணையாக இருந்திருக்கும். அடுத்த முறையாவது, வேலூரை காடெனக்காண, நல்லதோர் திட்டம் ஒன்று தீட்டி, நாட்டுக்கு அறிப்பாராக, காங்கிரஸ் குருநாதர்-காங்கிரஸ் சீடர்கள் கடைத்தேற!

மீண்டும் பணி புரிவேன்

காஞ்சியில் அவசரமான அலுவல் இருந்ததினால், 17-9-49 காலைநிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாமல் மாலையில்தான்கலந்துகொள்ள முடிந்தது. காலையில் நிறைவேற்றிய தீர்மானங்களை நான் மன பூர்வமாக ஆதரிக்கிறேன். புதுக் கட்சியின் தோற்றத்தை வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றுகிறேன்.

C. .TD. அரசு

மாணவர் இலக்கியக் கழகத் தொடக்க விழா

திருச்சி, செப். 17—

15-9-49 வியாழக்கிழமை மாலை 3-மணிக்கு நா. பேட்டை உயர்நிலைப்பள்ளியில் காட்டாண்மைக் கழக அங்கத்தினர் தோழர் எஸ். எம். சடையர் அவர்கள் தலைமையில் திருச்சி தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் "வள்ளுவரும் குறளும்" என்னும் பொருள் பற்றிப் பேசினர். பள்ளி மண்டபத்தில் சொற்பொழிவின் போது பொது மக்களை அவர் ஒவ்வொரு தமிழனும் திருக்குறளை அவசியம் படிக்க வேண்டும் என்றும், படித்து அதன்படி நடக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இறுதியாக பள்ளித் தமிழாசிரியர் தோழர் செ. கணபதி அவர்கள் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது என, தோழர் ரா. பாஸ்கரன் அறிவிக்கிறார்.

நல்ல முயற்சிதான் ஆனால் நடக்குமா?

"இந்தியாவில் ஒவ்வொருவரிடமும் மிகக் குறைந்த அளவிலேயே நிலங்கள் இருக்கின்றன. துண்டு துண்டாக நிலங்களை வைத்துக் கொண்டு விவசாயிகள் ஒன்றும் செய்ய முடியாது. தனித் தனியாக நிலங்கள் இருப்பதால் விளைவு வருக வழியில்லாமற் போய் விடுகிறது. எனவே கூட்டுப் பண்ணை முறையில் விவசாயம் நடத்தினால் தான், நாட்டில் பயிர் விளைவைப் பெருக்குவதில் சரியானபடி பலன் கிடைக்கும்"

என்று இந்திய அரசாங்க உணவுக கமிஷனர் பம்பாய் கூட்டுறவுக் கவுன்ஸில் கூட்டத்தில் பேசினர்.

நிலங்கள் துண்டுத் துண்டாக இருப்பதால் இயந்திரக் கார்ப்பைகளைப் பயன் படுத்தி நவீன முறையில் பயிரிட முடியாது. துண்டுகளிட்டுப் பாகம் பாகமாகப் பிரிப்பதால், பல ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படாமல் பாகப் பிரிவினையின் எல்லைக் கோடாகப்போகின்றன. அதே சமயத்தில் சிலருக்குக் கிடைக்கும் வசதிகள் மற்றவர்களுக்குக் கிடைக்காமல் பயிரிடவும் முடியாமற் போகின்றன. இவை மட்டுமன்றி இன்னும் பல குறைபாடுகள் இந்தத் துண்டு நிலங்களால் ஏற்படுகின்றன.

எனவே, நாட்டிலே நல்ல வகையில் பயிர் விளைச்சலைப் பெருக்க வேண்டுமென்னும் அவா உண்மையாகவே இருக்குமாயின், கூட்டுப் பண்ணை முறையை உடனே மேற்கொண்டு அரசாங்கம் முனைந்து பணியாற்ற வேண்டும்.

விவசாயிகளே இம் முறையை மேற் கொள்ளட்டும் என்று விட முடியாது. அப்படி விட்டால் அதனல் பலன் கிட்டாது. விவசாயிகளுக்குப் புதிதாகத் தோன்றும் இந்த முறையை அவர்கள் உடனே அனுசரிக்க முன் வரமாட்டார்கள்.

எனவே, அரசாங்கமே இதில் முனைந்து கூட்டுப் பண்ணைகள் அமைக்க வேண்டும். பயிரிடப்படாத நிலங்கள் எவர் வசத்திலுமில்லாதபடி மீட்டு, பயிரிடப்படுமாறு கவனிக்கவேண்டும். கிணறுகள், கால்வாய்கள் வெட்டத் தனித்தனி நபர்களிடம பணம் கொடுக்கும் வழக்கத்தை விட்டொழித்து, நல்ல முறையில் கிணறு எடுத்துக் கொடுத்தல், கால்வாய் வெட்டித் தால் முதலிய வேலைகளை அரசாங்கமே செய்துதரல் வேண்டும்.

இவற்றை அரசாங்கம் கவனிக்குமா? இந்திய அரசாங்க உணவுக் கமிஷனர் மேடையலங்காரமாகப் பேசியதாகாமல், தாம் கூறியதைச் செயலில் நடத்திக்காட்ட இந்திய அரசாங்கத்தையும், அதன்மூலம் மாகாண அரசாங்கங்களையும் தூண்டித் தொண்டாற்ற முன்வருவாரா? அல்லது காங்கிரஸ் கட்சியின் மரபைப் பின்பற்றி எதைக்கூறினாலும் அது மேடை வரைதான் என்று இருந்துவிடுவாரா?

சென்னையைப் பொருத்தமட்டில் நமக்கு ஆண்டுதோறும் 45 லட்சம் டன் அரிசி பற்றாக்குறையாகவே இருந்துவிடுகிறது. கடந்த 4 ஆண்டுகளாகச் செய்துவந்த உணவு உற்பத்திப்பெருக்க முயற்சியின் பலனாக, 2¼ லட்சம் டன் உணவுப் பொருள்களே அதிகமாக உற்பத்தியாகி யிருக்கின்றன.

இன்னும் மேற்கொண்டு அபிவிருத்திசெய்ய, இன்னும் 3½கோடி ரூபாய் கிராமகச்செலவாகுமாம், அதுவன்றி, நீர்பாசனம் கருதி, 13கோடி ரூபாய் செலவிடப்படுமாம். அடுத்த ஆண்டு முடிவதற்குள் 120 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயிரிடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமாம்.

இவையனைத்தும் ஏட்டில் வெறும் புள்ளிக்கணக்காக இல்லாமல் பலனளிக்கக் கூடியதாக இருக்கவேண்டுமானால், இந்திய உணவுக்கமிஷனர் கருத்து நிறைவேற்றப்படவேண்டும். நம மாகாணத்தில் உணவுப் பஞ்சம் ஒழிய இன்னும் 42¼ லட்சம் டன் அரிசி விளைந்தாகவேண்டும் என்பதை அரசாங்கம் கருத்திலூன்றி, பேசசளவில் வான்முகல் ஒழிச்சத்தமிட்டுப் பேசுவதாலும் ஏட்டில் புள்ளிக் கணக்கைப் போட்டு விடுவதாலும், எந்தவிதப்பயனும் கிடைக்காதென்பதை உணர்ந்து, நடை முறையில் பலனளிக்கக்கூடிய வழிகளை சென்னை அரசாங்கம் பின் பற்றுமா?

பாரதி விழா

வேலூர், செப். 16—

இவ்வூர் மகந்து உயர்நிலைப் பள்ளியில், முனிசிபல் கமிஷனர் தோழர் கதிர்வேலு அவர்கள் தலைமையில் 13-9-49ல் நடைபெற்றது. தலைவர் தம் முகவுரையில் பாரதியாரின் தமிழ்த்தொண்டையும், தமிழ்ப்பற்றையும விளக்கி மிக அழகுபட எடுத்துக் கூறினர். பின்பு ஆரணி தமிழாசிரியர் தோழர் ச. மாணிக்கவாசகம் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

"கட்டமுகி" தோற்றம்!

பொம்பூர், செப். 18—

5-9-48-ல் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்ட, தோழர் பா. கை. குமரேசன், தோழியர் மோஹனம்பாள் ஆகியோருக்கு 13-9-49-ல் பிறந்த பெண் மகவுக்கு "அட்டமுகி" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப் பெற்றோம். மகிழ்ச்சி!

திருமணம்

மதுரை, செப். 12—

இன்று பிற்பகல் 2-மணிக்கு தோழர் சோலையப்பன்—தோழியர். முத்தம்மாள் இருவரும் மதுரையில் திருமணப்பதிவு செய்துகொண்டு, தோழர் முத்து அவர்கள தலைமையில் மாலை மாற்றிக் கொண்டனர்.

நன்றி அறிவிப்பு

சௌபாக்யவதி சாரதாம்பாளுக்கும், திண்டுக்கல் கோவாப்ரேட்டிவ் இன்ஸ்பெக்டர் சிரஞ்சீவி உ. சுப்பையாவுக்கும் 9-9-49 வெள்ளிக்கிழமை யன்று திருப்பரங்குன்றம் ஆயிரவைசியமஞ்சப்புத்தூர் மண்டபத்தில் நடைபெற்ற திருமண விழாவில் கலந்துகொண்ட உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும், வாழ்த்து பத்திரங்கள் வாசித்தளித்தவர்களுக்கும், சன்மானங்கள் வழங்கியவர்களுக்கும், தம்பதிகளை ஆசீர்வதித்து செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

M. ராமலிங்கம், S சுப்பிரமணியம்.

பார்ட்னர்கள், 'சைபால்' கம்பெனி (14-9-49) மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.